# 33

# தகவல் தொழில்நுட்பத் தமிழ்க் கலைச்சொற்களைத் தரப்படுத்துதல்

**மு. சிவலிங்கம்**

*சென்னை, தமிழ்நாடு, இந்தியா*
*<sivalingam@vsnl.net>*

---

## காலமும் சூழலும்

ஒரு காலத்தில் பல்கலைக்கழகங்களில் ஒரு பாடமாக மட்டுமே இருந்துவந்த கணினி அறிவியல் நாளடைவில் தொழில்நுட்ப அறிவியலின் ஒரு துணையாக வளர்ச்சி பெற்று, இன்றைக்கு எந்தவோர் அறிவியல் துறையின் வளர்ச்சிக்கும் அடிப்படையாக விளங்கும் ஒரு கல்வியாகப் பரிணமித்துள்ளது. எந்த அறிவியல் பாடத்தைக் கற்பவராயினும், எந்தத் தொழில்நுட்பத் துறையைப் பயில்பவராயினும் கணினி அறிவியலையும் கற்றிருக்க வேண்டும் என்பது கட்டாயத் தேவையாகிவிட்டது. எந்தவொரு வேலைக்குச் செல்பவராயினும் கணினியை இயக்கத் தெரிந்திருக்கவேண்டும் என்பது கட்டாயமாகி விட்டது. சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் கணினிப் பயிற்சியில் அக்கறை காட்டத் தொடங்கி விட்டார்கள். இதன் காரணமாக, கணினிக் கல்வியைத் தத்தம் தாய்மொழியில் பெறவேண்டிய ஆர்வமும் தேவையும் அதிகரித்துள்ளது.

## தமிழ்நாட்டில் கணினிக் கல்வி

தமிழ்நாட்டின் சிற்றூர்களில் – மூலை முடுக்குகளில் – எல்லாம் கணினி கற்றுத் தரும் பயிற்சி மையங்களைக் காண முடிகிறது. பள்ளி, கல்லூரி, பாலிடெக்னிக், பொறியியல் கல்லூரி மாணவர்கள் மட்டுமின்றி, அலுவலகம் செல்வோர், சிறிய தொழில் நடத்துவோர் – ஏன் – வீட்டில் ஓளிவாக இருக்கும் பெண்களும் கூட கணினிப் பயிற்சியில் ஆர்வம் காட்டுகின்றனர்.

இந்தியாவில் உள்ள மொத்தப் பொறியியல் கல்லூரிகளில் பாதி தமிழ்நாட்டில் உள்ளன. பெரும்பாலான தனியார் பாலிடெக்னிக் மற்றும் பொறியியல் கல்லூரிகள் கிராமப் பகுதிகளில் அமைந்துள்ளன. பள்ளியில் தமிழ்வழிக் கல்வி பயின்ற எண்ணற்ற கிராமத்து மாணவர்கள் அக்கல்லூரிகளில் தொழில் நுட்பக் கல்வி பயிலுகின்றனர். கணினி அறிவியலைத் தமிழ்வழிக் கற்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். அனைத்துத் தொழில்நுட்பங்களையும் தமிழில் கற்றுத் தரவேண்டும் என்கிற ஆர்வம் அரசிடமும் இருக்கிறது.

## தமிழில் கணினி வெளியீடுகள்

இணையத்தில் நுழைந்த முதல் இந்திய மொழி தமிழ் மொழி. இணையத்தில் ஏராளமான தமிழ் வலையகங்கள் உள்ளன. இந்திய மொழிகளிலேயே முதன் முதலில் கணினித் தொழில்நுட்பத்துக் கென தனிப் பத்திரிகை வெளியிடப்பட்டது தமிழ் மொழியில்தான். இணையத்துக்கென்றே தனியான தமிழ் இதழும் உண்டு. கணினி அறிவியலின் அடிப்படைத் தகவல்கள் தொடங்கி இன்றைய நவீன தொழில்நுட்பத் தகவல்கள் வரை தமிழில் வெளியிடப்படுகின்றன. மைக்ரோசாஃப்ட்டின் புதிய மொழியான சி# மொழிப் பாடங்கள் 'தமிழ் கம்ப்யூட்டர்' இதழில் இரண்டாண்டு முன்பிருந்தே முழுமை யாக வெளியிடப்பட்டன.

விண்டோஸ், யூனிக்ஸ், லீனக்ஸ், இணையம், மின்னஞ்சல், மின்வணிகம், மின்வெளிச் சட்டங்கள், சி, சி++, விசுவல் பேசிக் ஜாவா, ஹெச்டிஎம்எல், கோரல் டிரா, ஃபோட்டோ ஷாப், ஆஃபீஸ் எக்ஸ்பீ, ஹார்டுவேர் போன்ற அனைத்து தலைப்புகளிலும் தமிழ் மொழியில் ஏராளமான புத்தகங்கள் வெளியிடப் பட்டுள்ளன. தகவல் தொழில்நுட்பத்துக்கென இந்திய மொழிகளில் வேறெந்த மொழியிலும் இவ்வளவு புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளனவா என்பது ஐயமே.

### தமிழ் மென்பொருள்கள்

பத்திரிகைகள் புத்தகங்கள் மட்டுமின்றி, கணினித் திரைகளில் வெகுகாலந்தொட்டே தமிழ் மொழி உலா வந்துகொண்டிருக்கிறது. ஏராளமான மென்பொருள் தொகுப்புகள் தமிழில் வெளியிடப்பட்டுள்ளன. உரைத் தொகுப்பான்கள் (text editor), சொல் செயலிகள் (word processors), தரவுத்தள மேலாண்மை (database management), மின்னஞ்சல் (e-mail), இணைய உலாவி (web browser), கணக்கியல் தொகுப்புகள் (account packages), குழந்தைப் பாடல்கள், மாணவர்க்கான பாடங்கள், வெளிநாட்டில் வாழும் தமிழ் மக்கள் தமிழ் கற்றுக் கொள்வதற்கான பாடங்கள், கணினி அடிப்படையிலான பாடப் பயிற்சிகள் (computer-based tutorials), பல்லூடக விளையாட்டுகள் (multimedia games) – இன்னும் இவை போன்ற மென்பொருள்கள் தமிழில் வெளியிடப்பட்டுள்ளன.

### தமிழில் கணினிச் செய்திகள்

இன்றைக்கு தினசரி/வார/மாதப் பத்திரிகைகளில், வானொலியில், தொலைக்காட்சியில் நாள் தோறும் தகவல் தொழில்நுட்பத் துறை சார்பான செய்திகள் வந்தவண்ணம் உள்ளன. கணினி விழிப்புணர்வு வேறெந்த மாநிலத்தை விடவும் தமிழ்நாட்டில் அதிகமாக உள்ளது என்று சொன்னால் மிகை ஆகாது.

### கணித் தமிழைத் தரப்படுத்துதல்

பேச்சுத் தமிழில் நெல்லைத் தமிழ், கோவைத் தமிழ், சென்னைத் தமிழ் என்றெல்லாம் வழங்கப்படுவது போல், கணித் தமிழும் ஊருக்கு ஒரு வடிவம், நாட்டுக்கு ஒரு வடிவம் என்கிற நிலையைக் காண முடிகிறது. அறிவியல் என்பது அனைத்தாருக்கும் பொதுவானது. அது போலக் கணித் தமிழும் தமிழ் பேசும் சமுதாயம் எங்கும் ஒன்றுபோலப் பயன்படுத்தப்பட வேண்டும். தகவல் தொழில்நுட்பத் தமிழ்க் கலைச்சொற்கள் தரப்படுத்தப்படவேண்டிய காலகட்டத்தை எட்டிவிட்டோம் என்றுதான் சொல்லவேண் டும். தமிழில் வழங்கும் சில கலைச் சொற்கள் தமிழ்நாடு, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் வேறுபடுவது தவிர்க்க முடியாதது என்பதை ஒப்புக்கொண்டாலும், ஒரே பத்திரிகையில் வெவ்வேறு பக்கங்களில் வெவ்வேறு கலைச் சொல் இடம்பெறுவதை ஏற்றுக்கொள்ள முடியாதல்லவா?

ஹார்டு டிஸ்க் என்பது நிலைவட்டு, வன்தட்டு என்றும் காம்பேக்ட் டிஸ்க் என்பது குறுவட்டு, குறுந்தட்டு, குறுந்தகடு, மென்தட்டு என்று பலவகையிலும் பயன்படுத்தப்படுகிறது. ஒரே செய்தித் தாளில் வெவ்வேறு நாளில் வெவ்வேறு சொல் பயன்படுத்தப்படுகிறது. வானொலியில், தொலைக்காட்சி யில் ஒவ்வொரு நாள் ஒவ்வொரு சொல் பயன்படுத்தப்படுகிறது.

பல்வேறு நிறுவனங்கள் சொல்செயலி போன்ற தமிழ் மென்பொருள்களை வெளியிட்டுள்ளன. ஆங்கில மென்பொருள்களில் உலகளாவிய அளவில் பயன்படுத்தப்படும் File, Edit, View, Format, Print, Save, Exit, Cut, Copy, Paste, Spell Check, OK, Cancel, Browse போன்ற சொற்களுக்கு தாங்கள் சரியென்று கருதும் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர். உலகளாவிய அளவில் பயன்படுத்தப் படும் மென்பொருள்கள் தமிழில் வெளியிடப்படும்போது அனைத்து மென்பொருள் தயாரிப்பாளர்களும் கலைச்சொற்களை ஒன்றுபோலப் பயன்படுத்தவேண்டும். அதற்கு அனைவராலும் ஒப்புக்கொள்ளத்தக்க தரப்படுத்தப்பட்ட கலைச் சொல் களஞ்சியம் தேவை.

நிறுவனங்களின் பெயர்கள், வல்லுநர்களின் பெயர்கள், மென்பொருளின் பெயர்கள் போன்றவற்றை ஒலி பெயர்த்து எழுதும்போதும் அவரவர்க்குத் தோன்றும் முறையில் எழுதுகின்றனர். இன்டர்நெட் எக்ஸ்ப் ளோரர் என்பது சரியா? இண்டர்நெட் எக்ஸ்ப்ளோரர் சரியா? ஃபாக்ஸ்ப்ரோ – ஃபாக்ஸ்புரோ, லைனக்ஸ் – லீனக்ஸ் – லினக்ஸ் – இன்னும் பல.

தலைப்பெழுத்துச் சுருக்கங்களிலும் சரியான அணுகுமுறை இல்லை. டி.டி.பி. (DTP), பிபிஎல் (BPL), கேபிபிஎஸ் (kbps) என்று எழுதுவது சரியாகுமா? D, T மற்றும் பி, எல் ஆகியவற்றை வேறுபடுத்திக் காட்டவேண்டாமா?

கணித் தமிழின் முறையான வளர்ச்சிக்கு விசைப்பலகை மற்றும் எழுத்துக் குறியீட்டு முறையைத் தரப் படுத்தியது போல கலைச்சொற்களைத் தரப்படுத்தலும் கட்டாயத் தேவையாகும். உடனடித் தேவையுமா கும். இது வரை வெளியிடப்பட்டுள்ள அனைத்து கலைச்சொல் அகராதிகளையும் ஆய்வு செய்து, தரப் படுத்தப்பட்ட கலைச்சொல் அகராதி ஒன்று உருவாக்கப்படவேண்டும். இதற்கான திசைவழியில் அரசோ, பல்கலைக்கழகங்களோ, தமிழ்ச் சமூக அமைப்புகளோ போதுமான முயற்சிகளை மேற்கொள்ள வில்லை என்றே கூறவேண்டும். தமிழ் இணையமாவது இதற்கொண்டு வழிகாட்டவேண்டும்.